பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 30 புதன்கிழமை 13.05.2020 கதிர் 57



# பிரபாவின் அரசியல் போராட்டம் குறித்து சுமந்திரன் கூறாதமையால்தான் சர்ச்சை



## நிலைமையைத் தெளிவுபடுத்துகின்றார் சி.வீ.கே.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,மே 13

"தமிழரின் தேசியத் தலைவர் பிரபாகரனின் அரசியல் போராட்டம், ஆயுதப் போராட்டம் ஆகிய இரண்டு குறித்தும் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போது இரண்டையும் நிராகரித்த சுமந்திரன், ஆயுதப் போராட்டம் பற்றி மட்டுமே 'தாம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை' என்ற ரீதியில் பதில் தந்திருக்கின்றார். தலைவரின் அரசியல் போராட்டம் குறித்து சுமந்திரன் பதில் கூறாமையால்தான் இவ்வளவு சர்ச்சையும்."

- இப்படி நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே. சிவஞானம்.

2☞




## சுமந்திரனின் படத்துக்கு நல்லூரில் செருப்புமாலை

யாழ்ப்பாணம், மே. 13

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் உருவப்படம் காட்சிப்படுத்தப்பட்டு, செருப்பு மாலை அணிவிக்கப்பட்ட பரபரப்புச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

2☞

## சங்கானையில் இன்று கூடினர் குடிமக்கள்!



யாழ்ப்பாணம், மே. 13

சங்கானை மதுபானச்சாலைக்கு முன்பாக இன்று பகல் 11 மணி தொடக்கம் மதுப்பிரியர்கள் ஆயிரக்கணக்கில் குழுமியிருந்தனர்.

சமூக இடைவெளியைப் பேணாதவர்கள் மீது தாம் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள் எனப்

2☞

## சுமந்திரன் ஒரு புல்லுருவி களையெடுக்கவேண்டும்!

### சொல்பவர் கருணா அம்மான்

மட்டக்களப்பு, மே. 13

எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் இருந்தும் கூட அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. அன்று இருந்த ரணில் அரசிடம் அதிகாரம் மிக்கவர்களாக இருந்த கூட்டமைப்பினர் நினைத்திருந்தால் அரசியல் கைதிகளை விடுவித்திருக்க முடியும். தேர்தல் காலங்களில் கூட்டமைப்பின் நாடகங்கள் அரங்கேறுவது உண்மையான விடயம். சுமந்திரன் போன்ற புல்லுருவிகளை தமிழ் மக்கள் களையெடுக்க வேண்டும் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும்

2☞

## 382 பேர் குணமடைவு; 498 பேர் சிகிச்சையில்

கொழும்பு, மே. 13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 16 பேர் பூரண குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர்.

2☞

## ராஜிதவுக்கு மீண்டும் ஆப்பு; உடனடியாகக் கைதுசெய்க!

### சி.ஐ.டிக்குப் பறந்தது நீதிமன்ற உத்தரவு

கொழும்பு, மே. 13

வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பான வழக்கில் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்னவை உடன் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2☞

## வாரத்தில் ஏழு நாள்களும் திறக்கும் பாடசாலைகள்?

கொழும்பு, மே. 13

கோவிட் - 19 தொற்று நோய்க்குப்பின்னர்கல்வியில் இழந்த வாய்ப்புகளைப் பிடிக்க வாரத்தின் ஏழு நாள்களும் பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம்செலுத்தியுள்ளது என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

சிறிய குழுக்களாக வகுப்புகள் நடத்தப்படும் என்பதால் ஏழு நாள்களும்ஆசிரியர்கள்அல்லது மாணவர்கள் சுழற்சி முறையில் வகுப்புகளில் கலந்துகொள்ள முடியும் என்று கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு ஆசிரியரும் மாணவரும் வாரத்தில் நான்கு நாள்கள் மட்டுமே

2☞

## நினைவேந்தலில் பங்கேற்றவர்களை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே. 13

முள்ளிவாய்க்கால் நினைவுகூரலில் கலந்துகொண்டவர்களை தனிமைப்படுத்தவுள்ளதாக யாழ்.பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்ணான்டோ கூறியுள்ளார்.

2☞

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று முற்பகல் செம்மணியில்



யாழ்ப்பாணம், மே. 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு நினைவுச் சுடரேற்றுவதற்கு யாழ்ப்பாணம் பொலிஸார் அனுமதி வழங்க மறுத்தனர். எனினும் சுமார் 30 நிமிடங்களின் பின் நினைவுச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

2☞

## எகிறியது கடற்படையின் பாதிப்பு! இதுவரை 454 சிப்பாய்கள் இலக்கு!!

இலங்கையில் இதுவரை கண்டறியப்பட்ட 889 கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் 454 பேர் கடற்படை சிப்பாய்கள் என்று சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுப் புதிதாக அடையாளம்

2☞

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சங்கானையில் இன்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் தலைமையகம் அறிவித்திருந்தபோதிலும் மதுபானசாலைக்கு முன்பாக மதுப் பிரியர்கள் மிக நெருக்கமாக நின்றதை அவதானிக்க முடிந்தது.

அத்துடன் வட்டுக்கோட்டை மற்றும் மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எந்தவொரு உணவகங்களையும் திறப்பதற்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஊரடங்கு தளர்த்தப்பட்ட மாவட்டங்களில் மதுபானச் சாலைகளை இன்று முற்பகல் 11 மணிக்குத் திறக்கப்பட்டன.

இதனை அடுத்து சகல மாவட்டங்களிலும் மதுபானச் சாலைகளுக்கு முன்பாக நீண்ட வரிசையில் குடிமக்கள் காத்திருந்தனர்.

மதுபானச்சாலைகளில் நேற்று பின்பற்றப்படும் நடைமுறைகள் உள்ளிட்டவற்றைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் நாள்களில் முடிவெடுக்கப்படும் என்று மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## சுமந்திரனின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர்த்திலீபனின் நினைவிடத்துக்கு அருகில் இந்த உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது.

இன்று அதிகாலை முதல் அந்த இடத்தில் சுமந்திரனின் உருவப்பொம்மையை அவதானிக்க முடிந்தது.

பின்னர் அந்த இடத்துக்கு வந்த யாழ். பொலிஸார் அந்த உருவப் பொம்மையை அங்கிருந்து அகற்றினர்.

## எகிறியது கடற்படையின் பாதிப்பு! ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டுள்ள 20 கொரோனாத் தொற்றாளர்களில் 19 பேர் கடற்படையினர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளாகியுள்ள கடற்படையினரில் இதுவரை 62 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

## நினைவேந்தலில் பங்கேற்றவர்களை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் நிகழ்ந்த போரில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொதுமக்களுக்கான நினைவேந்தல் ஆண்டு தோறும் இடம்பெற்று வருகிறது.

இதன்படி இந்த ஆண்டும் முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை யாழ்.செம்மணிப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் நிகழ்வை நிறுத்தியுள்ளதுடன் அங்கிருந்தவர்களை வெளியேறுமாறு பணித்துள்ளனர். எனினும் சமூக இடைவெளியைப் பேணி நினைவுகூரல் இடம்பெற்றிருந்தது.

இதனையடுத்து நினைவுகூரல் நிகழ்வில் கலந்துகொண்டவர்களின் விவரங்கள் பொலிஸாரால் திரட்டப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே அவர்களைத் தனிமைப்படுத்தவுள்ளனர் என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்ணான்டோ கூறியுள்ளார்.

## சுமந்திரன் ஒரு புல்லுருவி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநாயகமூர்த்தி முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

கல்முனை பகுதியில் புதன்கிழமை முற்பகல் கட்சி ஆதரவாளர்களைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் பிரதமரைச் சந்தித்துள்ளார். உண்மையாக அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டியவர்கள். அதற்காக வேண்டித்தான் நாங்கள் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவாகப் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தோம். அதனை ஒரு கோரிக்கையாக வைத்திருந்தோம் அதனை அவர்களும் ஏற்றுக் கொண்டிருந்தார் .

சட்ட நடவடிக்கைகளை ஆராய்ந்து நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அதற்கிடையில் சுமந்திரன் நல்லவர் போன்று பல தியாகங்களை தமிழ் மக்களுக்கு புரிந்தவர் போன்று பிரதமரைச் சந்தித்து அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும், காணிகளை விடுவிக்கப்பட வேண்டும் என மனுவை வழங்கியிருக்கிறார். இதனைத் தமிழ் மக்கள் நன்றாக புரிந்து கொள்ளவேண்டும் - என்றார்.

## 382 பேர் குணமடைவு; ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்தஎண்ணிக்கை 366இலிருந்து 382ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றாளர்கள் 889 பேரில் 09 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 498 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, மேலும் 105 பேர் வைத்திய சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

## முள்ளிவாய்க்கால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இந்த நினைவுச் சுடரை ஏற்றுவதற்காக வந்தபோதே பொலிஸார் இவ்வாறு அனுமதி மறுத்தனர்.

அங்கு வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ஆகியோர் பொலிஸாருடன் பேச்சு நடத்தினர்.

எனினும் சுமார் 30 நிமிடங்களாக பொலிஸாரால் அனுமதியளிக்கப்படவில்லை.

அங்கு இராணுவத்தினரும் வருகை தந்தமையுடன், நினைவஞ்சலி செலுத்த முடியாது எனவும் திரும்பிச் செல்லுமாறும் பொலிஸார் பணித்தனர்.

எனினும் பின்னர் தனித்து நின்று அஞ்சலிக்க அனுமதிக்கப்பட்டது.

## பிரபாவின் அரசியல் போராட்டம் குறித்து சுமந்திரன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரனின் சர்ச்சைக்குரிய பேட்டி தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 08.05.2020ஆம் திகதி எம்.ஏ. சுமந்திரன் அவர்கள் **'truth with chamuditha'** என்பவருக்கு வழங்கிய நேர்காணல் மிகப் பெரும் சர்ச்சையை தமிழ்தேசிய அரசியல் பரப்பில் உருவாக்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக எனது கருத்தை வெளியிடுமாறு ஊடகவியலாளர்களும் வேறுபலரும் கேட்டுக்கொண்டதற்கமைய எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனது கருத்து - திரு. சுமந்திரனின் சிங்கள மொழியிலான பேட்டியை முழுமையாகப் பார்த்து கேட்ட பின்னரானது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுமார் 20 நிமிடங்களுக்கு மேலான இப்பேட்டியை ஊடகவியலாளர் அறிமுகம் செய்யும் போது 'யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்' என்றே அறிமுகம் செய்துள்ளார். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரை 'கூட்டமைப்பின் பேச்சாளர்' என்று அறிமுகம் செய்யவில்லை. சுமந்திரனும் அவ்வாறு கூறவில்லை.

ஆகவே இப்பேட்டியில் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் அவரது தனிப்பட்ட கருத்துக்களே தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதோ தமிழரசுக் கட்சியினதோ அல்ல என்பது தெளிவானது. அவரது கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தமிழரசுக் கட்சியினதும் கருத்தாக சிலர் விமர்சிக்க முனைவது பொருத்தமற்றதும் தவறானதுமாகும்.

இந்தப் பேட்டியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய விடயம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பானது.

நீங்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அரசியல் போராட்டம் மற்றும் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளும் ஒருவரா? என்ற கேள்விக்குப் பதிலளித்த திரு.சுமந்திரன் இல்லை நான் ஏற்றுக் கொள்ளவில்லை எனப் பதிலளித்த போது ஊடகவியலாளர் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லையா? எனவினவியபோது "நான் இதை யாழ்ப்பாணத்திலும் சொல்கிறேன். ஏனைய இடங்களிலும் சொல்கிறேன். ஆனால் எனக்கு எதிர்ப்புகள் உள்ளன.'அவர்கள் எங்களுக்காகத் தானே போராடினார்கள். ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள் இல்லை?' என என்னோடு முரண்படுகின்றனர். அதற்கு காரணம் நான் ஆயுதப் போராட்டம் ஒன்றை ஒரு போதும் ஆதரிப்பவர் அல்லன் என்பது தான் என சுமந்திரன் பதிலளிக்கிறார்.

இங்கே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது கேள்வியாளர் தேசிய தலைவரது அரசியல் போராட்டம் ('தேசபாலன வியாபாரய') மற்றும் ஆயுதப் போராட்டம் ('சன்னத்த வியாபாரய') ஆகிய இரண்டு போராட்டங்கள் பற்றிக் கேள்வியெழுப்பிய போது இரண்டையும் நிராகரித்த சுமந்திரன் ஆயுதப் போராட்டம் பற்றி மட்டுமே பதிலளித்துள்ளார்.

தமிழின வரலாற்றில் விடுதலைப் போராட்டத்தின் அரசியல் போராட்டம் மிகவும் இன்றியமையாத அம்சமாக எப்பொழுதும் இருந்துள்ளது. அந்த அம்சம் தொடர்பாக பதிலளிக்காமல் ஆயுதப் போராட்டம் குறித்து மட்டும் சுமந்திரன் பதிலளித்தமை இந்த சர்ச்சைக்கான காரணியாக அமைந்துள்ளதாகவே நான் கருதுகிறேன்.

1970களின் பிற்பகுதியில் முனைப்புப்பெற்ற இளைஞர்களின் விடுதலைப் போராட்டங்கள் யாவும் 14.05.1976 இல் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தனித் தமிழீழ விடுதலைக்கான தீர்மானத்தின் அடிப்படையிலேயே எழுச்சி பெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது நிலைப்பாட்டை - வெளிப்பாட்டை - தெளிவுபடுத்தி வந்துள்ளார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஓர் உண்மையான பௌத்தனாக இருந்திருந்தால் நான் ஆயுதம் ஏந்தியிருக்கவேண்டி இருக்காது என்றும் -

நாம் ஆயுதப் போராட்டத்தை விரும்பி வரித்துக்கொண்டவர்கள் அல்லர் என்றும் -

இலங்கை இராணுவத்தினதும் அரசினதும் அடக்குமுறையிலிருந்து தற்காத்துக் கொள்ளவே ஆயுதம் ஏந்தினோம் என்றும் -

போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது இலட்சியமும் இலக்கும் மாறாது என்றும் - கூறியவர் தேசியத் தலைவர் பிரபாகரன்.

ஜனநாயக அரசியலை ஆயுதப் போராட்டத்துடன் சமமாகவே தேசியத் தலைவர் நோக்கினார் என்பதற்கு பல சான்றுகள் உண்டு.

உதாரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு முன்னே 1991இல் ஈரோஸ் பட்டியலில் என்னையும் வேறு சிலரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிப்பித்து பிரேமதாஸாவுடன் பேச்சு நடத்த அனுப்பிவைத்தவர்.

நாங்கள் நெடுக அடிபட்டுக்கொண்டிருக்க முடியாது. ஜனநாயக அரசியலிலும் ஈடுபடவேண்டும் என அப்போது அவர் என்னிடம் கூறியமையையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மிதவாத அரசியலை தமிழ் அரசியல் கட்சிகள் முன்னெடுத்தபோது ஆயுதமேந்திய போராட்டத்தை விடுதலைப் புலிகள் முன்னெடுத்த நிலையில் இரண்டு துறையும் ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியம் கருதியே சில முக்கிய அரசியல் கட்சிகளை ஒன்று சேர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை விடுதலைப் புலிகள் உருவாக்கியமை வரலாறு. அதன் பெறுபேறுதான் 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற அதி உச்சமான 22ஆசனங்கள் ஆகும்.

பேட்டியில் கேட்டப்பட்ட தேசியக் கொடி, சமஷ்டி முறைமை போன்றவற்றுக்கு விளக்கமளித்தமை போன்று தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான இந்தக் கேள்விக்கும் விளக்கமளித்திருந்தால் பிரச்சினை எழுந்திராது.

கி.ஆ.பே.விசுவநாதன் போன்ற தமிழ் அறிஞர்கள் 'ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் தலைவர்களில் ஒருவர் பிரபாகரன்' என்று சிலாகித்து பெருமைப்படுத்திய தேசியத் தலைவரின் பெயரை உள்ளடக்கி எழுப்பிய கேள்விக்கு மூன்று சொல்லில் நான் இதை ஏற்றுக்கொள்ளவில்லையென கூறியமையே சர்ச்சைக்குரியதாகிறது. தமிழ் மக்களின் நியாயப்பாட்டை துணிந்து கூறியிருக்கவேண்டும்.

இலங்கைக்குள்ளேயே முடக்கிக் கிடந்த எமது அரசியல் போராட்டத்தைத் தந்தை செல்வநாயகம் மற்றும் அமரர் அமிர்தலிங்கம் போன்றவர்கள் இந்தியாவரை முன்னெடுத்தபோது அதனை சர்வதேச மயப்படுத்தியது விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம்தான் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

ஆயுதப்போராட்டம் ஒன்றும் உலகுக்கு புதிதானது அல்ல. பலநாடுகளின் வரலாறு ஆயுதப்போராட்டங்களுடன்தான் தொடர்புபட்டது. அதுவும் எமது போராட்ட வடிவங்களில் ஒன்றாக இருந்தது. அதேநேரம் அரசியல், இராஜதந்திர அணுகுமுறைகளையும் விடுதலைப் புலிகள் முன்னெடுத்தே வந்துள்ளனர் என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

ஆயுத வடிவப் போராட்டத்தில் சுமந்திரன் உடன்படாதிருக்கலாம் அது அவரது தனிப்பட்ட உரித்தாக இருக்கலாம். அந்தப் போராட்டத்தின் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வேட்கை வெளியுலகுக்குப் பகிரப்பட்டு ஆதரவு பெற்ற நிலையோடு தொடர்புபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்துகொண்டு அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறுவதை நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம்; தவிர்த்திருக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியையும் பொறுத்தவரை விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தின் மூலம் உலகமயப்படுத்தப்பட்ட அரசியல் நிலைப்பாட்டிலேயே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஜனநாயக ரீதியாகப் பயணிப்போம் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். - என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## பாக். போல இலங்கையும் மாறும்?

'வேலிக்கு ஓணான் சாட்சி' என்பார்கள். அது போல நாட்டில் நடப்பது இராணுவ ஆட்சி என்ற குற்றச்சாட்டுக்குப் பதில் கூற நல்ல சாட்சியம் ஒன்றைக் கொண்டு வந்திருக்கின்றது அரசுத் தரப்பு.

கோட்டாபய ராஜபக்ஷ புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் சிவில் சேவையில் முக்கிய பதவிகள் பலவற்றில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் தொடர்ந்து நியமனம் பெற்று வருகின்றனர்.

இப்போது குறுகிய காலத்துக்குள் – ஆறு மாதத்துக்குள் – முக்கியமான 22 சிவில் அதிகாரிகளின் இடங்களுக்கு ஓய்வு பெற்ற அல்லது பதவியில் இருக்கின்ற இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

சுதந்திர இலங்கையின் சுமார் முக்கால் நூற்றாண்டு கால ஜனநாயக ஆட்சியில் இது ஒரு புதிய – விநோதமான – விபரீதமான – பண்பியல்பாகும்.

முதலில் இராணுவத்தில் கேணல் தர நிலை அதிகாரியாகவும் பின்னர் நாட்டின் பாதுகாப்புச் செயலாளராகவும் இருந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் தலைவராக – ஜனாதிபதியாக – பொறுப்பேற்ற பின்னர்தான் இந்த இராணுவ முறைமை நிர்வாகத்துக்குள் நாடு சிக்கும் பேரவல நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தப் போக்கு ஜனநாயக ஆட்சிக்கும், சட்டம், நீதி, ஒழுங்கு நிலை நிறுத்தப்படுத்துவதற்கும் பெரும் சவாலாக மாறக்கூடும் என உள்ளூர், உள்நாடு மற்றும் சர்வதேச அமைப்புகள் பல எச்சரிக்கை மணி எழுப்பி உள்ளன.

உண்மைமற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பின் பணிப்பாளர் ஜஸ்மின் சூகா அம்மையார் இராணுவ ஆட்சிக்குள் இலங்கை சிக்கப் போவதற்கான ஏதுநிலைகள் கட்டவிழ்ந்து வருகின்றமையை விவரங்களோடு எச்சரிக்கையாக வெளியிட்டிருக்கின்றார்.

நாட்டில் நடப்பது ராஜபக்ஷக்களின் சர்வாதிகார இராணுவ ஆட்சி என்பது சிறு பிள்ளைக்கும் கூட அப்பட்டமாகத் தெரியும் என்ற நிலைமையே இங்கு உள்ளது என மக்கள் ஐக்கிய சக்தியின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸா தெரிவித்திருக்கின்றார்.

2005 முதல் பத்து ஆண்டுகள் இந்த நாட்டில் ராஜபக்ஷக்களின் இருண்ட யுக ஆட்சிக்காலம் நடந்தது. நாடு இப்போது குறுகிய காலத்துக்குள் மீண்டும் அந்தத் திசையை நோக்கி – இருண்ட யுக ஆட்சியை நோக்கி – நகர்ந்து கொண்டிருப்பதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

"இந்த இருண்ட யுக ஆட்சிக்கு 2015 இல் நடைபெற்ற இரண்டு பெரிய தேர்தல்களின் போதும் மக்கள் சரியான பதிலடி கொடுத்தார்கள். மக்களின் வாக்குப் பலத்தால் சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டக்கட்டது. அதேபோல இப்போது முனைப்புறத் தொடங்கியிருக்கும் புதிய இராணுவ ஆட்சிக்கும் நடக்கவிருக்கும் தேர்தல் மூலம் மக்கள் முடிவு கட்டுவர்." – என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார்.

அவர் உட்பட எதிர்க்கட்சித் தரப்பினர் எல்லோரும் கவிழ்த்துக் கொட்டிய நெல்லிக்காய் மூடை போல சிதறுண்டு கிடந்து கொண்டு, தினசரி வலுவடைந்து, முழு இராணுவக் கட்டமைப்பு போல திரண்டு வரும் கோட்டாபய ராஜபக்ஷவின் அதிகாரத்தை பொதுத் தேர்தலில் வீழ்த்துவோம் என்று வீறாப்புப் பேசுவது மந்திரத்தால் மாங்காய் பறிக்கும் கதைதான்.

தாம் கூறுவதை அர்த்தமுள்ளதாக – செயலுருப் பெறத்தக்கதாக – மாற்றும் மக்களின் சக்தியோ, வசீகரமோ, ஆளுமையோ, மக்கள் தளமோ இன்றைய நிலை வரை ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எந்த எதிர்க் கட்சித் தரப்புக்கும் இல்லை என்பதே தற்போதைய கள நிலைமையாகும்.

இந்த நிலையில் முன்னாள் இராணுவ உயரதிகாரியான கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றமையை அடுத்து நாட்டின் முழு ஆட்சிக் கட்டமைப்புமே இராணுவக் கட்டமைப்புப் போன்ற வடிவத்தை எடுக்கும் இந்தப் புறச்சூழலை முறியடிக்கும் வலிமை எதிரணியிடம் இப்போதைக்கு இருப்பதாக நம்புவதற்கு இடமில்லை.

அதே வேளை நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பு இராணுவ நிர்வாக வடிவம் எடுப்பதாகக் கூறப்படுவதை அரசுத் தலைமை ஒரேயடியாக மறுத்து நிற்கின்றது. அதற்கான வாதங்களையும் கூட அத்தரப்பு காட்ட முனைகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஓய்வு பெற்ற படை அதிகாரிகள் ஆறு நாடுகளுக்கான தூதுவர்களாக நியமிக்கப்பட்டமையைத் தான் தனது வாதத்துக்கு ஆதாரமாக தற்போதைய அரசு காட்ட முயல்கின்றது. இந்த விளக்கம் மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றது.

"அமெரிக்க வரலாற்றில் 44 பேர் இதுவரை ஜனாதிபதியாக இருந்துள்ளனர். அவர்களில் 26 பேர் இராணுவத்தினர்" என்று ஓர் இற்றுப்போன ஆதாரத்தையும் அரசுத் தரப்பு வைக்கின்றது.

உண்மைதான். அங்கு 26 முன்னாள் படை அதிகாரிகள் பின்னர் நாட்டின் ஜனாதிபதியாக வந்திருக்கின்றார்கள். ஆனால் அதற்காக அந்த நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பே இராணுவ மயப் படுத்தப்படவில்லை.

ஆனால் இங்கு அப்படி மாறுகின்றது. இதனால், மிகவிரைவில் ஆட்சி முறை தொடர்பான விடயத்தில் நமது நாடு பாகிஸ்தான் போன்று ஆபத்துடையதாக மாறிவிடும். நாட்டின் சிவில் சமூகமும், பொதுமக்களும் இவ் விடயத்தில் மிகத் தெளிவாகவும் ஜரூராகவும் இருந்தால்தான் நாட்டைக் காப்பாற்ற முடியும்.

# இலங்கையில் இராணுவ ஆட்சி இல்லை என்று மறுக்கிறது அரசு

கொழும்பு,மே13

இராணுவத் தளபதிகளை ஜனாதிபதியாக்குவதற்கு முயற்சித்து இரண்டு தடவைகளும் தோல்வி கண்டவர்களே இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவ ஆட்சியை நோக்கிப் பயணிக்கின்றார் என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர் என அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

'முன்னாள், இந்நாள் இராணுவ அதிகாரிகளுக்கு அரச கட்டமைப்பில் முக்கிய பதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சுகாதார அமைச்சின் செயலாளர் பதவிக்குக் கூட ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். நாடு இராணுவ மயமாக்கலை நோக்கிப் பயணிப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றனவே' என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இப்படியான கருத்துக்களை சமூகவலைத் தளங்களில் உருவாக்கும் நபர்கள் யார்? இராணுவத் தளபதியாக இருந்தவர்களை ஜனாதிபதியாக்குவதற்கு முயற்சித்து, இரண்டு தடவைகளும் தோல்வி கண்டவர்களே இதன் பின்னணியில் செயற்படுகின்றனர். சரத் பொன்சேகா, மகேஷ் சேனாநாயக்க ஆகிய இருவரையுமே ஜனாதிபதியாக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் விசேட மருத்துவ நிபுணராவார். குறிப்பாக நியமனம் வழங்கும்போது அவர் இராணுவமா, எந்த இனத்தை, மதத்தைச் சார்ந்தவர் என்று அல்லாமல், தகுதி அடிப்படையிலேயே வழங்கப்படவேண்டும். அதனையே ஜனாதிபதி செய்து வருகின்றார். இராணுவ மருத்துவ அணியில் இருந்த திறமையான – தகுதியுடைய மருத்துவ அதிகாரியே இவர். எனவே, அவரின் தகைமையில் எவ்வித குறைபாடுகளும் இல்லை. அது இராணுவ மயமாக்கல் செயற்பாடும் கிடையாது.

கடந்த ஆட்சியின்போது 6 நாடுகளுக்குத் தூதுவர்களாக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இப்படி செய்தவர்களே குறுகிய அரசியல் நோக்கில் தற்போது விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

நாட்டுக்குப் புதியதொரு வழியைக் காட்டவே ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ வந்துள்ளார். அவர் ஓர் இராணுவ அதிகாரி. அவர் போன்ற தலைவர் தற்போதைய சூழ்நிலையில் இல்லாது இருந்திருந்தால் நாட்டுக்கு என்ன நடந்திருக்கும்?

அமெரிக்க வரலாற்றில் இதுவரை 44 பேர் ஜனாதிபதிகளாகப் பதவி வகித்துள்ளனர். இவர்களில் 26 பேர் இராணுவத்தில் இருந்தவர்கள் – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாரத்தில் ஏழு நாள்களும் திறக்கும் ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைக்குச் சென்றால்போதும். பாடத்திட்டங்களை முடிப்பதற்கான இறுதி இலக்கைக் கொண்டு வகுப்புகளில் கற்பித்தல் ஒரு முன் திட்டமிடப்பட்ட பொறிமுறையில் ஏற்பாடு செய்ய முடியும் என்றால் அது போதுமானது என்று நாங்கள் சிந்தித்து வருகின்றோம்.

புதிய திட்டமிடலில், அதிக எண்ணிக்கையிலான மாணவர்களைத் தடுக்க 30 க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பை குறைந்த பட்சம் இரண்டு குழுக்களாக மட்டுப்படுத்தவேண்டும்என்று அமைச்சர் அழகப்பெரும குறிப்பிட்டார்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட சுமார் 868 பாடசாலைகளுக்கு புதிய பொறிமுறையைத் தழுவுவது எளிதல்ல, ஆனால் நாங்கள் அதைச் செய்ய வேண்டும். ஏனென்றால் கிட்டத்தட்ட 45 இலட்சம் மாணவர்கள் மற்றும் சுமார் 3 லட்சம் ஆசிரியர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிதான் எங்கள் முன்னுரிமை என்று அமைச்சர் அழகப்பெரும சுட்டிக்காட்டினார்.

நாடுமுழுவதும் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டதன் மூலம் நாடு இயல்புநிலைக்கு வந்த பின், பாடசாலைகள் முறையாக திறக்கப்படுவதற்கு முன்பு, 10 ஆயிரத்து 194 பாடசாலைகளுக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் வருதை தரவேண்டும்.

பாடசாலைகளைத் திறக்க முதற்கட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்பு கிருமி நீக்கம் செய்யப்படும். பாடசாலைகள் முழுமையாகப் பாதுகாப்பாகவும், கல்வி நடவடிக்கைகளைத் தொடங்கவும் தயாரான பின்னர், க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும், பின்னர் க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கும், இறுதியாக ஆரம்பப் பிரிவுக்கும் வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

பாடசாலை வளாகத்தில் மாணவர்கள் அதிக அளவில் ஒன்றிணைவதைத் தடுக்க இளநிலை மற்றும் மூத்தநிலை மாணவர்களுக்கு வெவ்வேறு நேரங்களில் பாடசாலை இடைவேளைகள் சுழற்சி அடிப்படையில் வழங்கப்படும் என்றும் அமைச்சர் அழப்பெரும தெரிவித்தார்.

மார்ச் 20 முதல் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு காரணமாக மொத்தம் 276 பாடசாலை மணித்தியாலங்கள் இழந்துள்ளன. மேலும் முடிவடையாத பாடத்திட்டங்களை எவ்வாறு முடிப்பது என்பது குறித்த பிரச்சினைக்கு தாம் விரைவில் தீர்வு காணவேண்டிய நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ராஜிதவுக்கு மீண்டும் ஆப்பு; ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு இன்று பிற்பகல் இந்த அதிரடி உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பான வழக்கில் ராஜித சேனரத்னவுக்கு கடந்த டிசெம்பர் 30ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணை உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று காலை இரத்துச் செய்தது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்குக்கடந்த டிசெம்பர் 24ஆம் திகதி பிடியாணை வழங்கப்பட்டது. அவர் டிசெம்பர் 26ஆம் திகதி லங்கா தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் டிசெம்பர் 27ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார். அவர் டிசெம்பர் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் தொடர்ந்தும் சேர்க்கப்பட்டிருந்த அவருக்கு, டிசெம்பர் 30ஆம் திகதி, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்க உத்தரவிட்டது.

ஆயினும், இந்த நீதிவான் நீதிமன்றத்தின் பிணை உத்தரவை எதிர்த்து, சட்டமா அதிபரினால் கடந்த ஜனவரி 08ஆம் திகதி மீளாய்வு மனு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் ராஜித சேனாரத்னவுக்கு வழங்கப்பட்ட பிணை உத்தரவை நீதிபதி மஞ்சுல திலகரத்ன இரத்துச் செய்தார்.

அத்துடன், இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜெயரட்னவுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்ன உத்தரவிட்டார்.

இந்தநிலையிலேயே முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்னவைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜெயரட்னவால் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு இன்று பிற்பகல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# விசாகப்பட்டினம் விஷ வாயு விபத்து: விசாரணை நடத்த நிபுணர்கள் குழு



ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் கடந்த 7 ஆம் திகதி 11 பேரைப் பலிவாங்கிய எல்.ஜி. ரசாயன ஆலை விபத்து பற்றி விசாரணை நடத்த சியோலில் உள்ள அதன் தலைமையகம் நிபுணர் குழுவை அனுப்பி வைத்துள்ளது.

தென் கொரியாவின் மிகப்பெரிய பெட்ரொ கெமிக்கல் நிறுவனமான எல்.ஜி.கெம்முக்கு சொந்தமான எல்ஜி பாலிமர்ஸ் என்ற இந்த ஆலையில் விஷ வாயு கசிந்து உயிர்ப்பலி ஏற்பட்டதுடன் 800 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்பது குறித்து ஆராய்வதுடன், உள்ளூர் மக்கள் மற்றும் இந்திய அரசு அதிகாரிகளுடன் பேசி விளக்கம் அளிக்க சியோலில் உள்ள பெட்ரொ கெமிக்கல்ஸ் வர்த்தக பிரிவு தலைவர் உள்பட 8 உறுப்பினர்கள் அடங்கிய குழு விசாகப்பட்டினம் சென்றுள்ளதாக எல்ஜி கெம் இன்று அறிவித்துள்ளது.

# இந்தியாவில் தமிழகத்தில்தான் அதிகளவில் பரிசோதனைகள்




சென்னை,மே13

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மாவட்ட கலெக்டர்களுடன் இன்று காலை 9.30 மணிக்கு தலைமை செயலகத்தில் இருந்து காணொலி காட்சி மூலம் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அனைத்து மாவட்ட கலெக்டர்களும் கலந்துகொண்டனர்.

துணை முதல் அமைச்சர் ஓ. பன்னீர் செல்வம், உள்ளாட்சி துறை அமைச்சர் எஸ்.பி. வேலுமணி, சுகாதார துறை அமைச்சர் விஜயபாஸ்கர், தலைமை செயலாளர் சண்முகம், சுகாதார துறை செயலாளர் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

வரும் 17 ஆம் திகதிக்கு பிறகு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கொரோனா தடுப்பு பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. கூட்டத்தில், முக கவசம் மற்றும் சமூக இடைவெளி போன்றவை முறையாக கடைப்பிடிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் பழனிசாமி, கண்ணுக்குத் தெரியாத வைரஸ் எளிதாகப் பரவும் என்பதைத் தொடர்ந்து கூறி வருகிறோம். கொரோனா தாக்கம் படிப்படியாக உயர்ந்து பின்னர் தான் குறையும் என வல்லுநர்கள் கூறுகின்றனர். மருத்துவர்களின் தீவிர சிகிச்சையால் ஏராளமானோர் குணமடைந்துள்ளனர்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக எண்ணிக்கையில் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. அதிக எண்ணிக்கையில் பரிசோதனைகள் செய்யப்படுவதால் அதிக பாதிப்பு தெரிகிறது.

மக்கள் யாரும் அச்சப்பட வேண்டியதில்லை. கொரோனா பாதிப்பு படிப்படியாக அதிகரித்துதான் பின்னர் குறையும். - எனக் கூறினார்.

# ரூ.500 செலவில் ஒரு மணியில் கொரோனா வைரஸ் சோதனை

## இந்தியாவில் புதிய முறை கண்டுபிடிப்பு

ஒருவருக்கு கொரோனா வைரஸ் உள்ளதா என்பதை ஒரு மணி நேரத்தில் கண்டுபிடிக்கும் சோதனை இன்னும் நான்கு வாரத்தில் நடைமுறைக்கு வர உள்ளது.



மத்திய அறிவியல் தொழில் ஆராய்ச்சிக் குழுவின் கீழ் செயல்படும் மரபியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் மையத்தின் மூத்த அறிவியலாளர்கள் தேவஜோதி சக்கரவர்த்தி, சோவிக் மைதி ஆகியோர் புதிய சோதனை முறையைக் கண்டறிந்துள்ளனர்.

இந்தச் சோதனையில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் உள்ளதா என்பதை ஒரு மணி நேரத்தில் துல்லியமாகக் கண்டறிய முடியும். பெலுடா டெஸ்ட் எனப்படும் இந்தச் சோதனைக்கு ஐந்நூறு ரூபாய்தான் செலவாகும். ஆர்.டி.பி.சி.ஆர். முறையில் கொரோனா சோதனை செய்வதற்கு நாலாயிரத்து ஐந்நூறு ரூபாய் செலவாவது குறிப்பிடத்தக்கது.

பெலுடா சோதனை முறைக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் அவசர ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளதால் இன்னும் நான்கு வாரங்களில் நடைமுறைக்கு வர உள்ளதாகக் கூறப்படுகிறது.

# டெல்லியில் கடுகதி வேகம் எடுக்கும் கொரோனா பாதிப்பு



ஊரடங்கு அறிவிக்கப்பட்டு 50 நாள்கள் ஆகும் நிலையில், டெல்லியில் தொற்று எண்ணிக்கை 254 மடங்கு அதிகரித்துள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.

ஊரடங்கு அறிவிக்கப்படுவதற்கு முந்தைய நாளான மார்ச் 24 ஆம் திகதி டெல்லியில் 30 பேருக்கு மட்டுமே தொற்று இருந்தது. ஆனால் மே 12 ஆம் திகதி நிலைவரப்படி அங்கு தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை 7,639 ஆக அதிகரித்துள்ளது.

அதே போன்று மார்ச் 24 வரை ஒரே ஒரு மரணம் நிகழ்ந்த டெல்லியில் இப்போது அது 86 ஆக உயர்ந்துள்ளது. அதே போன்று அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படும் நபர்களின் எண்ணிக்கை ஏப்ரல் இறுதியில் 50 ஆக இருந்தது இருந்து 111 ஆக இரு மடங்காகி உள்ளது. வென்டிலேட்டரில் இருந்த நோயாளிகளின் எண்ணிக்கையும் 5 இல் இருந்து 20 ஆக உயர்ந்துள்ளது.

# ராஜஸ்தானில் பயிர்களை அழிக்கும் வெட்டுக்கிளிகள்



ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீர் மாவட்டத்தில் வெட்டுக் கிளிகள் தாக்குதலால் விவசாயப் பயிர்கள் பெரும் அழிவை சந்தித்து வருகின்றன.

அண்டை நாடான பாகிஸ்தானில் வெட்டுக் கிளிகள் பெரும் சேதத்தை ஏற்படுத்தி வந்த நிலையில், தற்போது இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்துக்குள்ளும் அவை ஊடுருவியுள்ளன.

அஜ்மீர் மாவட்டத்தில் விவசாய நிலத்துக்குள் புகுந்துள்ள வெட்டுக்கிளிகள் கண்ணில் தென்பட்ட பயிர்கள் அனைத்தையும் தின்று வருகின்றன.

இதனால் அங்கு பெரும் பயிர் சேதம் ஏற்பட்டுள்ளது.

வெட்டுக்கிளிகள் குறித்த தகவலின்பேரில் தீயணைப்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து, பூச்சிக் கொல்லி மருந்தை தெளித்து அவற்றை அழிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

# உலகில் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 12ஆம் இடம்

உலகளவில் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் கனடாவை முந்தி இந்தியா 12 ஆம் இடத்துக்கு வந்துள்ளது.

உலகில் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி ஆகியவை முதல் 3 இடங்களை வகிக்கின்றன. அமெரிக்காவின் அண்டை நாடான கனடா 12 ஆம் இடத்தில் இருந்தது.

அந்த நாட்டில் பாதிப்பு எண்ணிக்கை 69 ஆயிரத்து 156 ஆக இருந்தது. இந்நிலையில் கனடாவை விட குறைவாக எண்ணிக்கை கொண்டிருந்த இந்தியா, அந்த எண்ணிக்கையை நேற்று தாண்டியது.

அதாவது இந்தியாவில் பாதிப்பு எண்ணிக்கை நேற்று 70 ஆயிரத்தை கடந்தது.

இதனால் கனடாவை முந்தி 12ஆவது இடத்திற்கு இந்தியா சென்றது. 11ஆவது இடத்தில் இந்தியாவின் அண்டை நாடான சீனா உள்ளது. அந்நாட்டில் 84 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு கொரோனா உறுதியாகியுள்ளது. 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனர்.



# கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் வெள்ளை மாளிகையில் நடைமுறைக்கு



டிரம்பின் பணியாளர் உள்ளிட்டோருக்கு கொரோனா உறுதியானதன் எதிரொலியாக, அமெரிக்க அதிபர் மாளிகையில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அதிபர் டிரம்பின் பணியாளர், துணை அதிபர் மைக் பென்சின் செய்தித் தொடர்பாளர் உள்பட வெள்ளை மாளிகையில் பணியாற்றிய சிலருக்கு கொரோனா உறுதியானது.

இதைத் தொடர்ந்து, அதிபர் மாளிகையில் தடுப்பு நடவடிக்கையை யாரும் கடைபிடிப்பதில்லை என அமெரிக்க ஊடகங்கள் விமர்சித்தன. இதனால் கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையை வெள்ளை மாளிகை தற்போது அமுல்படுத்தியுள்ளது.

வெள்ளை மாளிகையில் பணியாற்றுவோர் முகக்கவசம் அணிய வேண்டும், சமூக விலகலை கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# 20 ஆண்டுகளில் சீனாவில் இருந்து ஐந்து கொள்ளை நோய்கள் பரவின

## அமெரிக்கத் தரப்புக் கூறுகின்றது

வொஷிங்டன்,மே 13

சீனாவில் இருந்து கடந்த இருபதாண்டுகளில் ஐந்து கொள்ளை நோய்கள் பரவியுள்ளன என அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் ஓ பிரையன் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ரொபேர்ட் ஓ பிரையன் கூறியவை வருமாறு:-

கொரோனாவால் உலக நாடுகளில் 2 லட்சத்து 90 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்தமைக்கு சீனா தான் பொறுப்பேற்க வேண்டும். சீனாவின் உகானில் இருந்து தான் கொரோனா வைரஸ் பரவியது.

கடந்த 20 ஆண்டுகளில் சார்ஸ், பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், கொரோனா உள்ளிட்ட 5 கொள்ளை நோய்கள் சீனாவில் இருந்து பரவி உள்ளன.

கொரோனாவைக் கட்டுப்படுத்த மருத்துவ வல்லுநர்களை அனுப்ப அமெரிக்கா முன்வந்தபோது, அதை ஏற்கச் சீனா மறுத்துவிட்டது. சீனாவில் இருந்து தான் கொரோனா வைரஸ் பரவியது என்பதற்கான சான்றுகளை அமெரிக்கா தேடி வருகிறது என கூறினார்



# தங்கத்தால் செய்யப்பட்ட துப்பாக்கி மாபியா தலைவனிடமிருந்து பறிமுதல்



மெக்ஸிகோவில் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் கடத்தல் (மாபியா) கும்பல் தலைவனிடம் இருந்து தங்கத்தால் செய்யப்பட்ட துப்பாக்கியைப் பொலிஸார் கைப்பற்றி உள்ளனர். மத்திய மெக்ஸிகோவில் பிகடோனஸ் (Bigotonas) என்ற கடத்தல் கும்பல் தலைவராக எல் யூரி என்பவர் இருந்து வந்தார். எல் யூரியை பல ஆண்டுகளாகப் பொலிஸாரால் தேடி வந்த நிலையில் குறிப்பிட்ட இடத்தில் வர் பதுங்கியி ருக்கின்றார் என வந்த தகவலையடுத்து எல் யூரியை பொலிஸார் கைது செய்தனர்.

அப்போது அவர் தங்கத்தால் செய்து பதுக்கி வைத்திருந்த ஏ ஆர் 15 ரக துப்பாக்கியையும், தோட்டாக்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். இதேபோன்று கடந்த ஆண்டு பெண் தாதாவான மரியா லோபஸ் என்பவரிடம் தங்கத்தால் செய்யப்பட்ட ஏ.கே. 47 ரக துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டது.

# இரண்டாவது கொரோனா அலை சீனாவில் வீசும் என மக்கள் அச்சம்

கொத்து கொத்தாக கொரோனா தொற்று பரவுவதை தடுக்க, சீனாவின் வடகிழக்கில் அமைந்துள்ள ஜிலின் (Jilin) நகரின் எல்லைகள் மூடப்பட்டு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

40 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கும் இந்த நகரின் புறநகர்பகுதியான ஷுலானில் (Shulan) ஒரு குழுவினரிடம் தொற்று உறுதி செய்யப்பட்டது.

நிலைமை மோசமாக உள்ளது என தெரிவித்துள்ள நகர மேயர், தொற்று மேலும் பரவும் அபாயம் உள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.

தொற்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து திரையரங்குகள், உடற்பயிற்சி கூடங்கள், இன்டர்நெட் மையங்கள் உள்ளிட்டவை மூடப்பட்டுள்ளன.

சீனாவில் கொரோனாவின் இரண்டாம் கட்ட அலை வீசும் என அஞ்சப்படும் நிலையில், இந்த நகரில் மட்டும் இதுவரை 21 பேருக்கு தொற்று உறுதியாகி உள்ளது.





# கொரோனாவை வென்ற 113 வயது மூதாட்டி..!

ஸ்பெயின் நாட்டில் 113 வயதான மூதாட்டி ஒருவர், கொரோனா நோயிலிருந்து மீண்டுள்ளார். அந்த மூதாட்டியின் பெயர் மரியா பிரான்யாஸ் ஆகும்.

ஸ்பெயினின் கிழக்கு பகுதி நகரான ஓலாட்டிலுள்ள முதியோர் காப்பகத்தில் 20 ஆண்டுகளாக அவர் தங்கியுள்ளார். ஏப்ரல் மாதம் கொரோனா நோய் பாதிப்பிருப்பது உறுதியானதால் தனி அறையில் பல வாரங்களாகத் தனிமைபடுத்தப்பட்டிருந்தார்.

ஏற்கெனவே அக்காப்பகத்தில் பலர் உயிரிழந்த நிலையில், தற்போது உயிர் பிழைத்திருக்கும் மூதாட்டியே ஸ்பெயினில் கொரோனாவிலிருந்து குணமான அதிக வயதுடைய நபராக கருதப்படுகிறார்.

# உருகுவே கடலில் சிக்கி தவிக்கும் பயணக்கப்பல்



உருகுவே கடல்பகுதியில் சிக்கித் தவிக்கும் பயணக் கப்பலில் இருந்து 86பேர் கொரோனா காரணமாக மான்டிவீடியோவில் தரை இறக்கப்பட்டனர்.

ஆஸ்திரேலிய நிறுவனத்துக்கு சொந்தமான கிரேக் மோர்டைமர் என்ற பெயர் கொண்ட அந்த கப்பலில் 128பேர் உள்ளனர். அந்த கப்பல் தனது பயணத்திட்டப்படி தற்சமயம் ஸ்பானிஷ் துறைமுகமான லாஸ் பால்மாஸ்சுக்கு சென்றிருக்க வேண்டும்.

ஆனால் கொரோனா காரணமாக கடந்த மார்ச் 27 ஆம் திகதி முதல் உருகுவே கடல் பகுதியில் நின்றவாறு உள்ளது. இந்நிலையில் கப்பலில் பயணம் செய்தவர்களில் சிலருக்கு கொரோனா தொற்றுத் தாக்கி இருப்பதால் அவர்களை மான்டிவீடியோவில் இறக்க முடிவு செய் யப்பட்டது. இதனை தொடர்ந்து கப்பலில் இருந்த பெரும்பாலானவருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

# பூங்காக்கள், கடற்கரைகளை துபாயில் திறப்பதற்கு அனுமதி

ஊரடங்கை படிப்படியாக விலக்கி வரும் துபாய் அரசு பொது பூங்காக்களை திறக்கவும், தனியார் ஹோட்டல்களில் தங்கியிருக்கும் சுற்றுலாப்பயணிகள் தனியார் கடற்கரைகளில் கூடவும் அனுமதி அளித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

துபாய் கடந்த 24 ஆம் திகதி முதல் முழு ஊரடங்கை 8 மணி நேர இரவு நேர ஊரடங்காக மாற்றி அறிவித்தது.

குறைந்த எண்ணிக்கையில் உணவு விடுதிகளில் அமர்ந்து உண்ணவும், குறைந்த வாடிக்கையாளர்களுடன் ஷொப்பிங் மோல்களைத் திறக்கவும் அனுமதி அளிக்கப்பட்டது.

பூங்காக்கள், பீச்சுகள் திறக்கப்பட்டாலும் 5 பேருக்கு அதிகமாக ஒன்றாக கூடக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் பள்ளிவாசல்கள், திரையரங்குகள், பொது பீச்சுகள், இரவு விடுதிகள் ஆகியன தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என துபாய் அரசின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.



# தன்மானமுள்ள தமிழன் ஒருபோதும் யாருக்கும் சோரம் போகவேமாட்டான் என்கிறார் தவராசா

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் அதிகாரம் யாருக் கும் கிடையாது. அவ்வாறான கருத்துக்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் கூறியுள் ளமை தமிழ் மக்களின் மனதில் ஆறாத காயத்தையும் வேதனையையும் உருவாக்கியுள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. என இலங்கைத் தழிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியும ான கே.வி. தவராசா தெரிவித்தார்.



ஒருதன்மானமுள்ளதமிழன்ஒருபோதும்யாருக்கும் சோரம் போகமாட்டான் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு ஒரு வரலாற்றுக் காரணி இருக்கின்றது. அந்தக் காலகட்டத் தில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை எதிர்த் துப் போராட வேறு வழியின்றி ஆயுதப் போரே முடிவா கியது. தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டுமின்றி பல் வேறு தமிழ் இயக்கங்கள் தமது மக்களின் விடிவுக்காக ஆயுதப் போராட்டத்துக்குள் தள்ளப்பட்டன.

எந்தவொரு மக்கள் போராட்டமும் முதலில் இயக்க ரீதியில் ஆயுதம் தூக்கிய போராட்டமாகவும், பின்பு அதன் தலைவர்கள் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்வது நெல்சன் மண்டேலாவிலிருந்து வடிவம் பெறுகின்றமை தவிர்க்க முடியாதது. அத்தகைய போராட்டங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி வரை சிறந்த உதாரணங்களாக இருப்பதை சுமந்திரன் அறியாதவரா?

இத்தைகைய போராட்டங்களைக் கொச்சைப்படுத் தும் அதிகாரம் யாருக்கும் கிடையாது. அவ்வாறான கருத்துக்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின ரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரு மான எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளமை தமிழ் மக்க ளின் மனதில் ஆறாத காயத்தையும் வேதனையையும் உருவாக்கியுள்ளது.இதுவன்மையாகக்கண்டிக்கத்தக்கது.

கடந்த 08.05.2020 அன்று நேர்காணல் காணொ ளியில் – சுமந்திரன் வழங்கிய செவ்வியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தைத் தான் ஏற்றுக்கொள்ளப்போதில்லை கூறியுள்ளார். அத்துடன் தான் எந்தவொரு அரசியல் கைதிகளுக்கும் (முன் னாள் விடுதலைப்புலிகள்/ ஆதரவாளர்கள்) வாதாட வில்லை என்று கூறியதும், மக்கள் விடுதலை முன்ன ணிக்காக 1990ஆம் ஆண்டுகளில் வாதாடியதாகத் தெரிவித்ததும் வேடிக்கையானது.

இலங்கையின் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் தானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் மட்டுமே ஏற்றுக்கொள் வதாக நேர்காணலில் அவர் கூறியமை கட்சியின் ஏனைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை வேறுபடுத்திக்காட்டப்படுவதைஅவதானிக்கமுடிகின்றது.

தமிழ் மக்களின் விருப்பத்துக்கும் எதிர்பார்ப்புக் கும் நேர்மாறாக சுமந்திரன் செயற்படுகின்றார் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

அவருடைய கருத்துக்கள் தனிப்பட்ட கருத்தே யன்றி கட்சியின் கருத்து அல்ல எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கூறியுள்ளபோதும் சுமந்திரனு டைய கருத்துக்கள் தமிழ் மக்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பல ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளின் குற்ற வியல் வழக்குகளில் நான்கு தசாப்தங்களாக எனது உயி ருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் அனைத்தையும் பொருட்படுத்தாது எந்தப் பாதுகாப்புமின்றி இந்த நிமிடம் வரையும் களத்தில் இருக்கும் நானும் சிங்கள மக்களுக்கு மத்தியில்தான் வாழ்ந்து வருகின்றேன். ஒரு கோழை போன்று ஒருபோதும் நான் எவ்விதமான கருத்தியலுக்கும் அடிபணிந்து தமிழர் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கும் விதத்தில் அல்லது கொச்சைப்படுத்தும் விதத்தில் சுயலா பங்களுக்காக ஒருபோதும் கருத்து வெளியிட நினைத்தது கிடையாது. ஒரு தன்மானமுள்ள தமிழன் ஒருபோதும் யாருக்கும் சோரம் போகமாட்டான்.

சுமந்திரன் தனது கருத்துக்களால் தமிழ் மக்களின் மன தைப் புண்படுத்தி இருக்கின்றார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். கட்சியில் ஒரு பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் நபர் தனது வார்த்தைகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

இத்தகைய கருத்துக்களினால் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் கட்சியின் நலனுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே எனது பிரார்த்த னையாகும் – என அவர் தெரிவித்துள்ளார் .

## சீன விமானத்தில் பொருள்கள்



கொழும்பு, மே. 13

சீன விமானப்படையின் விமானம் ஒன்று மருந்து மற்றும் உதவிப் பொருட்களுடன் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங் கியுள்ளது.

கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட் டுள்ள இலங்கைப் படையினருக்குத் தேவை யான 5 மெற்றிக் தொன் மருந்து மற்றும் உத விப் பொருள்கள் இந்த விமானத்தில் ஏற்றி வரப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித் துள்ளது.

இந்த விமானத்தில், ஏற்றிவரப்பட்ட பொருள் களில் முகக்கவசங்கள், கையுறைகள், பாதுகாப்பு அங்கிகள், காலணிகள், தொற்று நீக்கி மருந் துகள் உள்ளிட்ட கொரோனா தடுப்புக்குத் தேவை யான பொருள்கள் உள்ளடங்கியுள்ளன.

## தேர்தல் குறித்து முடிவெடுக்க முடியாமல் முடிந்தது கூட்டம்!

கொழும்பு, மே. 13

பொதுத் தேர்தல் தொடர்பில், தேர்தல் ஆணைக் குழுவுக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக் கும் இடையே நேற்று பேச்சு நடத்தப்பட்ட போதி லும், ஜூன் 20ஆம் திகதி தேர்தலை நடத்துவது தொடர்பான எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்ப டாத நிலையில், சந்திப்பு முடிவுக்கு வந்துள்ளது.

நேற்றைய கலந்துரையாடலின்போது, நாடாளு மன்றத் தேர்தலுக்கான இறுதித் திகதியை அறிவிக் குமாறு, தேசிய தேர்தல் ஆணைக்குழுவிடம், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இருப்பினும், கொவிட் 19 தொற்றுப் பரவல் மற்றும் தேர்தலுக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் என்பன, அவ்வாறு திகதியைத் தீர்மானிப்பதற்குச் சவாலாக அமைந்திருந்தன.

இந்நிலையில், நீதிமன்றத் தீர்ப்பின் முடிவுக்காகத் தேசிய தேர்தல் ஆணைக்குழு காத்திருப்பதாகத் தெரிவித்த ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, தேர்தலுக்கு 35 நாள்களுக்கு முன் னதாகவே திகதி தீர்மானிக்கப்பட வேண்டும் எனச் சட்டம் இறுக்கமாகச் சொல்லவில்லை என்ற போதி லும், பிரசாரத் தேவைக்காகவே தாம் அதனைத் தீர்மானிப்பதாகக் கூறியுள்ளார்.

நேற்றைய பேச்சின்போது தொடர்ந்துரைத்துள்ள அவர், எங்கள் முதலாவது அக்கறை பொதுமக்க ளாவர். இரண்டாவதாக, அரச உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகளினதும் ஊழியர் களினதும் பாதுகாப்புக் குறித்து முக்கியக் கவனம் செலுத்துகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலுக்கு 34 கட்சிகளின் பிரதிநிதிகள் வந்திருந்த நிலையில், இன்று 24 கட்சிகளுடன் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. கொரியாவில் தேர்தல் நடத்தியதைப் போன்று, இலங்கையில் தேர்தலை நடத்த முடியாது. ஜூன் 20ஆம் திகதியன்று தேர்தலை நடத்துவதா அல்லது தள்ளிப்போடுவதா என, இப்போது அறிவிக்க முடியாது. தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் குறித்த தீர்ப் பின் அடிப்படையிலேயே, தேர்தல் குறித்த இறுதி த் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள் ளார்.

இதேவேளை இந்தக் கலந்துரையாடலின் போது, தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்பு இலக்கங்களைத் தேர்தல் ஆணைக்குழு வழங்க வேண்டுமென ஆளுங்கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்த போது, அதற்கு எதிர்க்கட்சிகள் தங்களது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir

முகக்கவசம்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி

நாளை (14/005/2020) தலைப்பு
முகக்கவசம்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# தள்ளிப்போகுமா புலமைப்பரிசில்?

கொழும்பு, மே. 13

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையைப் பிற்போடுவது சிறந்தது என்பதே தனது தனிப்பட்ட நிலைப்பாடு என கல்வி அமைச்சின் செயலாளர் சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகத்தின்சிபாரிசின்படியேபாடசாலையை திறப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

சமூக இடைவெளியை கவனத்துக் கொள்ளும் போது மாணவர்களின் ஒரு பகுதியினரையே அழைக்க வேண்டி ஏற்படும். இதன்போது முன்னுரிமை வழங்கி முதலில் உயர்தர மாணவர்களையும் பின்னர் சாதாரண தர மாணவர்களையும் அழைக்கவுள்ளோம்.

இந்தநிலையில், 5ஆம் தர மாணவர்களை அழைப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். புலமைப்பரிசில் பரீட்சையை இன்னும் சற்று பிற்போட்டால் சிறந்தது என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடு.

பாடங்களை நிறைவு செய்து இறுதியாண்டு பரீட்சையை நடத்துவதே எமது நோக்கம். எனவே பரீட்சை திகதி மாற்றமடையலாம். எனினும் இதுவரை திகதியை மாற்றுவதா என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கவில்லை – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-

தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

தோட்டக்காணி தேவை

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது. உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 078 284 5000

புழுக்கொடியல் விற்பனைக்கு.

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)

தொடர்புகளுக்கு: 076 100 5277

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)

தொடர்புகளுக்கு: 077 411 4422

வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 307 8799

# சுமந்திரன் தமிழரசுவில் நீடித்தால் சம்பந்தன், மாவையின் பலவீனமே

## சிவசக்தி ஆனந்தன் சீற்றம்



கொழும்பு, மே. 13

தமிழின உரிமைப் போராட்டத்தின் ஓரங்கமான ஆயுதப் விடுதலைப் போராட்டத்தினை இவ்வளவு மோசமாக கொச்சைப்படுத்திய பின்னரும் சுமந்திரன் இலங்கை தமிழரசுக்கட்சியில் நீடித்தால் அது அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன், தலைவர் மாவை.சேனாதிராசாவின் முதுகெலும்பற்ற பலவீனத்தன்மையையே வெளிப்படுத்துவதாக இருக்கும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலாளரும் முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், கூட்டமைப்பின் பேச்சாளராக சுமந்திரன் வெளியிட்ட கருத்துக்களின் ஆழத்தினையும் பின்னணியினையும் நன்கறிந்த ஆயுதவிடுதலைபோராட்ட வழி வந்த ரெலோ, புளொட் தரப்புக்கள் வெறுமனே கண்டன அறிக்கைகளுக்கு அப்பால் இந்த விடயத்தில் தீர்க்கமான முடிவெடுப்பதற்கு திராணியிருக்கின்றதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் ஊடகங்களுக்குவெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தந்தை செல்வா முதல் அமிர்தலிங்கம் வரையில் சாத்வீக ரீதியாக முன்னெடுத்த போராட்டங்களின் மீதான அடக்குமுறையும், கையறு நிலையுமே 1976 இல் வட்டுக்கோட்டையில் தனிஈழத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதனைநோக்கிய ஆயுத போராட்டம் முன்னெடுக்கப்படுவதற்கு காரணமாகியிருந்தன. தமிழ்த் தலைவர்கள் ஆயுதரீதியான விடுதலைப் போராட்டத்தை அப்போதைய இளைஞர்களிடத்தில் ஒப்படைத்தனர்.

தமிழினவிடுதலைக்காக ஆயுதமேந்திய அனைத்து இயக்கங்களிலும் தங்களை இணைத்துக்கொண்ட ஒவ்வொரு தமிழ் மகனும் தன் அன்புக்குரியவர்களை விட்டு பிரிந்து அடுத்த சந்ததியினர் உரிமைகளுடன் சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காக தனது இன்னுயிரை ஈகம் செய்வதற்கு தயாராகவே இருந்துள்ளார்கள். அவ்விதமாகவே செயற்பட்டுள்ளார்கள். இதில் ஆயுத விடுதலைப் போராட்டத்தினை மூன்று தசாப்த நீட்சியை தமிழீழ விடுதலைப்புலிகள் பதிவு செய்துள்ளார்கள். என்பதே வரலாறு.

ஆயுதப் போராட்டத்திற்கு பிள்ளையார் சுழியிட்டு தீர்மானங்களை எடுத்த (சுமந்திரன் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியின்) பெருந்தலைவர்களான தந்தை செல்வாவும், அமிர்தலிங்கமும் வழிநடத்திய தமிழரசுக் கட்சிக்குள் இருந்துகொண்டு, அவர்களை முட்டாள்கள் என்று கூற விளைகின்றாரா?

ஆயுதப்போராட்ட காலத்தில் போராட்டம் பற்றி எதுவுமறியாது, எந்தப் பங்களிப்பும் செய்யாது, கொழும்பில், குளிர் அறைகளில் படுத்துறங்கி ஒரு துளி வேர்வை சிந்தாது இருந்து அரச, அரசசார்பான தரப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் வருமானம் ஈட்டி விட்டு ஆயுதவிடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டதும் புற்றீசல் போன்று வெளியில் வந்து அரசியல் களம்புகுந்த சுமந்திரனுக்கு தமிழினத்தின் வரலாறும், இளைஞர்களின் வலிகளும்,இதியாங்களும், ஈகங்களும் தெரியுமா?

முள்ளிவாய்க்கால் அவலத்திற்கு ஐ.நா.மன்றின் முன் நீதிகேட்டு தமிழினம் நிற்கையில் தன் எஜமானரை திருப்திப்படுத்துவதற்காக தனியாளாகச் சென்று மைத்திரி – ரணில் நல்லாட்சியுடன் சேர்ந்து தீர்மானங்களில் அத்தனை மலினப்படுத்தல்களையும் செய்து,தீர்மானங்களை நீர்த்துப்போகச் செய்துவிட்டு வந்தார் சுமந்திரன் என்பது யாவரும் அறிந்ததே.

கூட்டமைப்பினுள் இருந்த காலத்தில் இந்த விடயத்தினை நாங்கள் பலதடைவகள் சுட்டிக்காட்டியபோது, ஜெனீவா விடயங்களை கையாளத்தெரிந்தவர் சுமந்திரனே என்று சம்பந்தனும், மாவையும் கூறி நியாயப்படுத்தினார்கள். அது மட்டுமல்லாது தற்போது ஜெனீவா தீர்மானம் மிகமிக மோசமாக மலினப்படுத்தப்பட்டு அடுத்த நகர்வுக்கே வழியில்லாது இருப்பதற்கும், ராஜபக்ஷ அரசு அதிலிருந்து துணிகரமாக விலகியமைக்கும் சுமந்திரனே காரண கர்த்தாவாகின்றார்.

அத்தகையவராகிய சுமந்திரனும்,மாவையும் தற்போது ராஜபக்ஷவினருடன் பேரம்பேசி நீதியைப் பெற்றுத்தரப்போவதாக தமிழ் மக்களுக்கு கூறுகின்றனர். இவ்வாறு கூறி ராஜபக்ஷவினருடன் கைகோர்த்து மீண்டும் சுயலாப அரசியலை முன்னெடுப்பதற்கே இவர்கள் திட்டமிடுகின்றனர். இந்த காய்நகர்த்தலை புரியாத அளவுக்கு தமிழ் மக்களை முட்டாள்களாகவும் தமக்கு வாக்களிக்கும் இயந்திரங்களாகவும் எண்ணுகின்றார்கள்.

இவ்வாறு மெல்லமெல்ல ஆயுத போராட்டத்தின் மீதும், ஆயுத இயக்கங்கள் மீதும் குற்றச்சாட்டுக்களை சுமத்தி ஈற்றில் சிங்களத்தின் ஒற்றையாட்சிக்கு மண்டியிட்டு சுகபோகங்களை அனுபவிப்பதே சுமந்திரனின் திரைமறைவு நிகழ்ச்சி நிரலாக இருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்த தமிழினத்தினையும் பலிக்கடாவாக்குவதற்கு இடமளிக்கமுடியாது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது உள்மனதில் வஞ்சம் கொண்டிருந்த சம்பந்தனும்இதலைமைத்துவ பண்புகளற்ற கையறு நிலையில் இருக்கும் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவையும், விடுதலைப்புலிகளை மறவர்களாக கொண்டு மேடைப்பேச்சுக்களில் வெளிப்படுத்தும் சிறிதரன் உள்ளிட்டவர்களும், பங்காளிகட்சிகளான புளொட், ரெலோ இயக்கங்களும், சுமந்திரனின் முன்னால் மண்டியிட்டு பெட்டிப்பாம்பாக அடங்கியே இருந்தனர். நல்லாட்சி அரசின் நான்கரை வருடங்களிலும் சுமந்திரன் காட்டிய இடங்களிலெல்லாம் கையுயர்த்தியும்,கையெழுத்திட்டும் வந்தனர் என்பதே சான்று.

எனவே கூட்டமைப்பின் பங்காளிகளான ரெலோவும், புளொட்டும் வெறுமனே கண்டன அறிக்கைகளுடன்இந்தவிடயத்தினைகைவிட்டுஆசனஅரசியலை முன்னெடுக்கப்போகின்றார்களா என்பது பிரதான கேள்வியாகின்றது. அவ்வாறு முன்னெடுப்பார்களாயின் அவர்களின் இயக்கங்களிலும் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஏனைய இயக்கங்களிலும் ஆகுதியாகிய போராளிகளின் ஆத்மாக்களுக்கும், தமிழ் மக்கள் சிந்திய இரத்தங்களுக்கும் என்ன பதிலளிக்கப்போகின்றார்கள் என்பதும் முக்கியமாகின்றது.

அதேபோன்று, ஒட்டுமொத்த தமிழினமுமே ஏதோவொரு விடுதலை இயக்கத்தின் மூலம் ஆயுதப்போராட்டத்தினை ஏற்று உணர்வெழுச்சியுடன் ஆதரித்திருக்கின்றார்கள். இந்நிலையில் அந்த மக்கள் முன் வாக்குகளுக்காக மண்டியிடப்போகும் தமிழரசுக்கட்சி இனியும் சுமந்திரனை தன்னுடன் இணைத்து வைத்திருக்கின்றப்போகின்றதா?

அதேவேளை சம்பந்தன் பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியேயும் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக மிகவும் கடுமையான மோசமான விமர்சனங்களை விதைத்து வந்துள்ளார் என்பது அனைவரும் அறிந்ததே. இதற்கான சாட்சியாக ஒலி,ஒளி ஆவணங்கள் ஊடகங்களில் வெளிவந்தன.

தமிழ் மக்களின் பேரழிவோடு யுத்தம் நடந்து முடிந்த போது அதனை முடித்து வைத்த அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்கு பாராளுமன்றத்தில் பாராட்டு தெரிவித்தார் சம்பந்தன். அதுமட்டுமல்லாது, 'நான் இப்போதுதான் திருகோணமலைக்கு பாதுகாப்பாக சென்றுவரக்கூடியதாக உள்ளது' எனவும் தெரிவித்திருந்தார். சுமந்திரனின் தலைவர் சம்பந்தனின் வழியில்தொண்டர்களும்செயற்படுகின்றனர்என்பதற்கு இது நல்லதொரு உதாரணமும் தமிழினத்தின் பெரும் சாபக்கேடுமாகும்.

தமிழரசுக் கட்சியினதும்,தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் பேச்சாளராக விளங்கும் சுமந்திரன் வெளியிடும் கருத்துக்கள் அவரின் தனிப்பட்ட கருத்துக்களே என சம்பந்தனும் மாவையும் எப்போதும் கூறிவருவது நகைப்பிற்கிடமானதே.

மரணித்த மாவீரர்களின் உடலங்களின் மீது நின்று வாக்குகளுக்காக அரசியல் செய்கின்ற நிலையில் தமிழரசுக்கட்சி உள்ளதென்ற வரலாற்று கறையை சுமப்பதை தவிர்க்கவே முடியாதுபோகும்.

அதுமட்டுமன்றி விடுதலைப் போராட்டத்தினை கொச்சைப்படுத்தி வரும் சம்பந்தன் சுமந்திரன் மீது தமிழரசுக்கட்சி நடவடிக்கைகளை எடுப்பதற்கு இயலாதிருக்குமாயின், பலவீனமான தமிழரசுக்கட்சியானது மீண்டும் ஒருமுறை முதுகெலும்பற்ற பலவீனமான அரசியல் கட்சி என அம்பலமாகுவதை தவிர்க்கவே முடியாது – என்றுள்ளது.

# ராஜபக்ஷக்களின் சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு இத்தேர்தலில் நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவர்

## ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு,மே 13

கொரோனாவின் அபாயத்துக்குள் நாடு சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும்போது மறுபுறத்தில் ராஜபக் ஷக்கஎின் சர்வாதிகார இராணுவ ஆட்சி தொடர்கின்றது. இந்தக் கொடூர ஆட்சிக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டி முடிவு கட்டுவர் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முன்னாள், இந்நாள் இராணுவ அதிகாரிகளுக்கு சிவில் நிர்வாகக் கட்டமைப்பில் முக்கிய பதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், நாடு இராணுவ ஆட்சியை நோக்கி பயணிக்கின்றது என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. எனினும், இதனை அமைச்சர் டலஸ் அழகப்பெரும மறுத்திருந்தார். இதற்குப் பதில் வழங்கும்போதே முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று அவர் தலைமையில் ராஜபக்ஷக்களின் ஆட்சி மீண்டும் வந்தது தொடக்கம் சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்குள் முக்கிய உயர் பதவிகளில் அவர்களுக்கு விசுவாசமான இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இது ராஜபக்ஷக்களின் சர்வாதிகார இராணுவ ஆட்சியை அப்பட்டமாக வெளிக்காட்டுகின்றது. இதை எக்காரணம் கொண்டும் ராஜபக்ஷ அணியினர் மறுக்கவே முடியாது.

சிறுபிள்ளைக்குக் கூடவே இன்று நாட்டில் நடப்பது ராஜபக்ஷக்களின் சர்வாதிகார இராணுவ ஆட்சி என்பது தெரியும். ஒட்டுமொத்த மக்களையும் அடிமைத்தனத்தில் வைத்திருக்கவே இப்படியான ஆட்சியை ராஜபக்ஷக்கள் முன்னெடுக்கின்றனர்.

2004ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 10 வருடங்கள் இந்த நாட்டில் ராஜபக்ஷக்களின் இப்படிப்பட்ட மோசமான ஆட்சி நிலவியது. இதற்கு 2015இல் நடைபெற்ற இரண்டு முக்கிய தேர்தல்களிலும் நாட்டு மக்கள் பதிலடி கொடுத்தார்கள். மக்களின் வாக்குப் பலத்தால் சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது. அதுபோல் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ராஜபக்ஷக்களின் சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு நாட்டு மக்கள் முடிவு கட்டுவர்.

பாதுகாப்பு சேவையில் இராணுவத்தின் அர்ப்பணிப்புக்களை நாங்கள் மதிக்கின்றோம். ஆனால், ராஜபக்ஷக்களின் சர்வாதிகார ஆட்சியில் அவர்களுக்கு விசுவாசமான இராணுவ அதிகாரிகளை சிவில் நிர்வாக சேவையில் உயர் பதவிகளில் அமர்த்துவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். ராஜபக்ஷக்களின் இப்படியான மோசமான செயலால் இராணுவத்தினருக்கு இருக்கின்ற மரியாதை இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் எம்மத்தியில் இருக்கின்றது - என தெரிவித்துள்ளார் .

# சிறுமிகள் இருவருக்கு பாலியல் துன்புறுத்தல்; மூவரைத் தேடுகிறது பருத்தித்துறை பொலிஸ்

யாழ்ப்பாணம், மே. 13

குடத்தனையில்சிறுமிகள்இருவரைபாலியல் ரீதியான துன்புறுத்திய குற்றச்சாட்டில் மூன்று பேர் பருத்தித்துறை பொலிஸாரால் தேடப்படுகின்றனர்.

வடமராட்சி கிழக்கு, குடத்தனை – பொற்பதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பொது இடம் ஒன்றில் 16 மற்றும் 17 வயதுச் சிறுமிகள் இருவர் தமது ஆண் நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்துள்ளனர்.

அங்கு வந்த மூவர், இளைஞர்கள் இருவரையும் அச்சுறுத்தி அவர்களை துரத்திவிட்டு, சிறுமிகள் இருவரையும் பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளனர்.

அதன் பின்னர் சிறுமிகள் இருவரையும் கட்டிவைத்துவிட்டு ஊரவர்களை அழைத்து தாக்கியுள்ளனர். சிறுமிகள் இருவரும் தமது நண்பர்களுடன் தகாத உறவில் இருந்தனர் என்று கூறிப் பொலிஸாருக்கு அந்த இளைஞர்கள் மூவரும் தகவல் வழங்கியுள்ளனர்.

சிறுமிகளை மீட்ட பொலிஸார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

சட்ட மருத்துவப் பரிசோதனையில் சிறுமிகள் தமக்கு நடந்தவற்றை வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

சட்ட மருத்துவப் பரிசோதனையை முன்னெடுத்த சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, சிறுமிகள் இருவரும் பாலியல் ரீதியாக துன்புறுதலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று அறிக்கை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சிறுமிகளை துன்புறுத்திய மூவரும் பருத்தித்துறை பொலிஸாரால் தேடப்படுகின்றனர்.

# மட்டக்களப்பு விபத்தில் ஊடகவியலாளர் மரணம்

மட்டக்களப்பு, மே. 13

மட்டக்களப்பு, கல்முனை பிரதான வீதி, பெரிய கல்லாறு நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் உழவு இயந்திரம் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பிரயாணித்த ஊடகவியலாளர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

தீபம் ஊடக நிறுவனத்தில் பணியாற்றிவரும் திருகோணமலை காபர் வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய ஊடகவியலாளர் மிதுன் என்றழைக்கப்படும் ஈ.மிதுன்சங்கர் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் மற்றும் அவரது நண்பர்களான இரு ஊடகவியலாளர் உட்பட 4 பேர் இரண்டு மோட்டார் சைக்கிளில் மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இருந்து கல்முனைக்கு உறவினர் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தனர்.

இதன்போது பிற்பகல் 2 மணியளவில் பெரியகல்லாறு நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகில் மோட்டர் சைக்கிள்களை வீதி ஓரத்தில் நிறுத்தியபோது பின்னால் வந்த உழவு இயந்திரம் மோட்டர் சைக்கிளில் மோதியது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் சென்ற ஊடகவியலாளர் படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, உழவு இயந்திர சாரதியை கைது செய்துள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# நேற்றைய தொற்றாளர்களில் 17 பேர் கடற்படையினராம்!



கொழும்பு,மே13

இலங்கையில் நேற்றுப் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள 20 கொரோனாத் தொற்றாளர்களில் 17 பேர் கடற்படையினர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

ஏனைய மூவரில் இருவர் கடற்படையினருடன் நெருக்கமாகப் பழகிய உறவினர்கள் என்றும், மற்றவர் டுபாயிலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தவர் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் இதுவரை கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் 455 பேர் கடற்படையினர் என்று கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர்களில் இதுவரை 52 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கோட்டாபயவின் ஆட்சியில் இதுவரையில் 22 படை அதிகாரிகள் சிவில் சேவைக்குள்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இலங்கையின் சிவில் சேவைக்குள் நியமிக்கப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்துள்ளது.

கோட்டாபய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் இதுவரை சிவில் நிர்வாகத்துக்குள் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்ட படை அதிகாரிகள் விவரம் வருமாறு:-

01. மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன: தொலைத்தொடர்புஒழுங்குமுறைஆணையத்தின் தலைவர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்.

02. லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா: உறுப்பினர் – பொருளாதர புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணி, தலைவர் – கொரோனா ஒழிப்புச் செயலணி, இராணுவத் தளபதி.

03. மேஜர் ஜெனரல் கே.பி. எகொடவெல: பிரதானி – ஜனாதிபதி செயலகம்.

04. மேஜர் ஜெனரல் கருணாரத்ன எகோடவேலா: தலைவர் – கொரோனா சுகாதார பராமரிப்பு சமூக பாதுகாப்பு நிதியம்.

05. அட்மிரல் ஜெயநாத் கொலம்பேஜ்: மேலதிக செயலர் – ஜனாதிபதி செயலகம்.

06. மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க: தலைவர் – துறைமுக அதிகார சபை.

07. மேஜர் ஜெனரல் நந்தன மல்லவராய்ச்சி: பணிப்பாளர் நாயகம் – பல்நோக்கு அபிவிருத்தி செயலணி.

08. மேஜர் ஜெனரல் சுமேதா பெரேரா: தலைவர் – வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு செயலணி.

09. மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ்: தலைவர் – தேசிய புலனாய்வுப் பணியகம்.

10. மேஜர் ஜெனரல் விஜிதா ரவிப்பிரியா: பணிப்பாளர் – சுங்கத் திணைக்களம்.

11. மேஜர் ஜெனரல் தர்னா ஹெட்டியாராய்ச்சி: தலைவர் – இலங்கை புனர்வாழ்வு ஆணைக்குழு.

12. யாப்பா சேனாதிபதி: ஜனாதிபதி செயலகம்.

13. மேஜர் ஜெனரல் சந்திரசிறி: தலைவர் – சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை.

14. பிரிகேடியர் துவான் சுரேஷ் சல்லே: தலைவர் – இலங்கை புலனாய்வு நிறுவனம்.

15. ஏ.எஸ்.பி. பிரசன்னா டி அல்விஸ்: பணிப்பாளர் – தீவிரவாத விசாரணை பணியகம்.

16. மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக: தலைவர் – நுகர்வோர் அதிகார சபை.

17. சீ.டீ. விக்ரமரத்ன: உறுப்பினர் – பொருளாதர புத்தெழுச்சி தொடர்பிலான ஜனாதிபதி செயலணி.

18. ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ்: உறுப்பினர் – பொருளாதர புத்தெழுச்சி தொடர்பிலான ஜனாதிபதி செயலணி.

19. மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க: உறுப்பினர், பொருளாதர புத்தெழுச்சி தொடர்பிலான ஜனாதிபதி செயலணி.

20. ஏர் மார்ஷல் ரொஷான் குணதிலக: ஆளுநர் – மேல் மாகாணம்.

21. மேஜர் ஜெனரல் எம். ஆர். டபிள்யூ. சொய்ஸா: தலைவர் – காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்.

22. மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க: செயலாளர் – சுகாதார அமைச்சு.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.05.2020 இல் வெளியிடப்பெற்றது.